## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தீண்டாமையைக் கடைபிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும் ஆதி திராவிட கிராமங்களுக்கு சென்னை தவிர்த்த பிற 31 மாவட்டங்களில் மாவட்டம் ஒவ்வொன்றிற்கு என வழங்கப்படும் பரிசுத் தொகையை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(கொடு.தடு(1))துறை

அரசாணை (நிலை) எண்: 69 நாள்: 11.07.2012

ஆனி 27 திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.61, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.05.1999
2. அரசாணை (நிலை) எண்.85, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 09.07.2010
3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க. எண். ஆ2/5990/2012, நாள் 22.03.2012.

-----

**ஆணை:–**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை தவிர்த்த இதர மாவட்டங்களில் மாவட்டங்களுக்கு ஒன்று என்ற அளவில் தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும் ஆதி திராவிட கிராமங்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.2.00 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

2. இந்நிலையில், 17.03.2012 –ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 2012–2013–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் வரவு செலவு மீதான மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டு, தீண்டாமையை கடைபிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமங்களின் (மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவில்) வளர்ச்சிக்காக வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகை ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை அறிவித்துள்ளார்கள்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை தவிர்த்த பிற மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத்

தேவையான நிதி ரூ.310.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்யுமாறும், இதில் இத்திட்டத்திற்காக 2012–2013–ஆம் நிதியாண்டின் வரவு – செலவு திட்டத்தில் ரூ.62.00 இலட்சம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதால் மீதத் தொகையான ரூ. 248.00 இலட்சத்தினை விடுவிக்குமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, சென்னை தவிர்த்த இதர 31 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு கிராமம் என்ற அளவில் தீண்டாமையைக் கடைபிடிக்காமல் நல்லிணக்கத்துடன் வாழும் கிராமத்தின் வளர்ச்சிக்காகத் தற்பொழுது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.2.00 இலட்சத்தை ரூ.10.00 இலட்சமாக (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) உயர்த்தியும், இச்செலவினத்திற்காக ஏற்கனவே 2012–2013–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.62.00 இலட்சம் போக எஞ்சிய தொகை ரூ.2,48,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தியெட்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

> “2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 01 –ஆதிதிராவிடர் நலன்– 800 ஏனைய செலவு –I திட்டத்தில் சேராதது AB தெரிந்தெடுத்த கிராமங்களுக்கு வெகுமதி அளித்தல்–09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை” (து.தொ.கு.எண்.2225–01–800–AB–0935)

6. இது ஒரு புதுத்துணைப்பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணைகள் நிதி (வ.செ.பொது-I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர் பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இப்பரிசுத் தொகையைச் செலவிடுவதற்கான நிபந்தனைகள், வழிமுறைகள், இதற்கென அமைக்கப்படும் குழு, பரிசுத்தொகையை பயன்படுத்தத் தேர்ந்தெடுக்கும் பணிகள் போன்ற விவரங்கள் கீழ் வருமாறு:–

1) உள்ளூர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுக் கோயில், குடிநீர்க்கிணறு, கடைகள், ஓட்டல்கள், குளம், ஏரி, சலூான் ஆகியவற்றை அனைவரும் சுதந்திரமாக அனுபவிக்கும் கிராமமாக இருக்க வேண்டும்.

2) தீண்டாமை ஒழிக்கப்பட்டது என்ற தத்துவத்தைக் கடைபிடிக்கும் மக்கள் உள்ள கிராமமாக இருக்க வேண்டும்.

3) தனியாருக்குச் சொந்தமான கிணறுகளில் பிறர் தண்ணீர் எடுப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லாத கிராமமாக இருக்க வேண்டும்.

4) இதர சமூகத்தினர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வீடுகளை வாடகைக்கு விட்டிருத்தல் வேண்டும்.

5) அனைத்து சமூகத்தினரும் விழாக்களில் ஒன்றாகச் சமமாக அமர்ந்து விருந்து சாப்பிடுதல் வேண்டும்.

6) இதர சமூகத்தினர் தங்களது விழாக்களுக்கு ஆதிதிராவிடர்களைக் கலந்து கொள்ள அழைத்தல் வேண்டும்.

7) தீண்டாமை ஒழிப்பைக் கண்ணியமாகக் கடைபிடிக்கும் அதே கிராமத்திற்கு மீண்டும் பரிசளிக்கலாம்.

8) அனைத்து சமூகத்தினரும் பல ஆண்டுகளாக சுமூகமாக நல்லுறவுடன் வாழும் கிராமமாக இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட தகுதிகளில் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட தகுதிகளைப் பின்பற்றும் ஊராட்சியை மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அமையும் கீழ்க்கண்ட குழு தேர்ந்தெடுக்கும்:

1) மாவட்ட ஆட்சியர் – தலைவர்
2) திட்ட அலுவலர்(மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)
3) மாவட்ட வருவாய் அலுவலர்
4) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்
5) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

<u>பரிசுத் தொகையைச் செலவிட மேற்கொள்ளும் பணிகள்</u>

1) குடிநீர் வசதி செய்தல் மற்றும் மேம்படுத்துதல்
2) பாதை வசதி மேம்பாடு
3) பள்ளிக்கட்டடம் சீர் செய்தல்
4) பள்ளி மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடம் கட்டுதல்
5) கால்நடைத் தண்ணீர் தொட்டி கட்டுதல்
6) புதிய விளக்குகள் அமைத்தல்

மேற்கண்ட வேலைகள் உதாரணமாகத் தரப்படுகின்றன. ஊராட்சியில் அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் எந்தப் பணியைச் செய்வது என்பதை <u>“ஊராட்சியே முடிவு செய்யலாம்”</u>.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 39008/12, நாள் 09.07.2012–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொக்கப் பேரேடு எண். 620 (அறுநூற்று இருபது)

// ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்

பெறுநர்:
ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை–5
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35
நகல்:–
நிதித்துறை அமைச்சரின் சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை–9
நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) / (வரவு செலவு –பொது I(ம) II) துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந8) துறை, சென்னை–9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்